# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,922/1—1970 සැප්තැම්බර් 5 වැනි සෙනසුරාදා — 1970.9.5

14,922/1 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 5 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது.)


# பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

எல். டி.–பி. 42/57 ம. தே. அ. எண் : எக்ஸ் 37/66.

### மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

**கட்டளை**

1959 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1968 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறுள்ள (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 277 ஆம் பிரிவின் (2) (அ) என்னும் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு மகாதேசாதிபதி வில்லியம் கொபல்லவ ஆகிய நான் இக்கட்டளை மூலம்—

(அ) அக்கட்டளைச் சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலுள்ள சட்டத்தினால் கண்டி மாநகர சபைக்கு அல்லது மாநகர சபை முதல்வருக்கு வழங்கப்பட்டுள்ள அல்லது சுமத்தப்பட்டுள்ள அல்லது உரித்தாக்கப்பட்டுள்ள எல்லா உரிமைகள், சிறப்புரிமைகள், தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கவும் பிரயோகிக்கவும், புரியவும், நிறைவேற்றவுமென ஆணையாளர்களாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. லோகம்வசம், கொட்வின் சிரிவர்தன அவர்களையும் கண்டி சிறு நிலக்கமக்காரர் ஆணைக்குழு ஆணையாளர் திரு. முத்துபண்டார சமரக்கோன் அவர்களையும் நியமிக்கிறேன் ; அத்துடன்

(ஆ) இக்கட்டளை 1970 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 6 ஆம் நாளன்று நடைமுறைக்கு வருமெனவும் வெளிப்படுத்துகிறேன்.

டபிள்யூ. கொபல்லவ,
மகாதேசாதிபதி.

கொழும்பு, 5, செத்தெம்பர் 1970.

9-528


கவனிக்க.—14,921/1 ஆம் இலக்கங் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இலக்கம் 14,921/6.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.